செய்தி வெளியீடு எண் : 1767 நாள் : 10.10.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சிப்காட் நிறுவனத்திற்கும் பிரிட்டிஷ் துணை உயர் ஆணையரகத்திற்கும் இடையேயும் மற்றும் சிப்காட் நிறுவனத்திற்கும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் இடையேயும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு – ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் மற்றும் தீயணைப்பு நிலையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (10.10.2022) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், சிப்காட் நிறுவனத்திற்கும் பிரிட்டிஷ் துணை உயர் ஆணையரகத்திற்கும் இடையே தொழில்நுட்ப உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சிப்காட் நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில்நுட்ப பங்குதாரராக நியமித்து அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், கங்கைகொண்டான் சிப்காட் தொழில் பூங்காவில், 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழில் பூங்காவில் 1.88 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள திட்ட மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் 1.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு நிலையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030–31 ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

சிப்காட் நிறுவனத்திற்கும் பிரிட்டிஷ் துணை உயர் ஆணையரகத்திற்கும் இடையே தொழில்நுட்ப உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், சூளகிரி வருங்கால நகர்திறன் பூங்காவிற்கான தொலைநோக்கு பார்வை மற்றும் முதன்மைத் திட்டம் தயாரிப்பதற்கும், உள்கட்டமைப்பு வசதிகள், முதலீட்டு வசதிகளுக்கான வழி வகைகள் மற்றும் ஆளுமை கட்டமைப்புகள் போன்றவற்றை வரையறுப்பதற்கும் சிப்காட் நிறுவனத்திற்கு இது உதவும். மேலும், வெளிநாடுகளிலுள்ள இத்தகைய பூங்காக்களில் உள்ள புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிந்து, அதை சூளகிரி வருங்கால நகர்திறன் பூங்காவின் வளர்ச்சிக்கு பயன்படுத்த, பிரிட்டிஷ் துணை உயர் ஆணையரகம் வகை செய்யும்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சிப்காட் நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில்நுட்ப பங்குதாரராக நியமித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒரகடம் மருத்துவ உபகரணங்கள் பூங்காவிற்கான சிறப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், சிப்காட் நிறுவனத்திற்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கவும், மருத்துவ தொழில்நுட்பத் துறையில் உள்ள உற்பத்தியாளர்களின் திறனை மேம்படுத்துவதோடு மருத்துவ துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் புதிய தயாரிப்புகளை உருவாக்க அண்ணா பல்கலைக்கழகம் தன் கிளை நிறுவனங்கள் மூலம் சிப்காட் நிறுவனத்தில் உள்ள உற்பத்தி பிரிவுகளுக்கு உதவும். சிப்காட் நிறுவனத்திற்கும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், தமிழ்நாட்டின் மருத்துவ தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக அமையும்.

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழில் பூங்காவில், 4994 சதுர அடி பரப்பளவில், 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இவ்வளாகத்தில் தொழில் முனைவோருக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை, கங்கைகொண்டான் சிப்காட் தொழில் பூங்காவில் 156 தொழில் நிறுவனங்களுக்கு 99 வருட குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 60 நிறுவனங்கள் தொழில் உற்பத்தியை தொடங்கியுள்ளனர். மேலும், கட்டுமான பணியில் 30 நிறுவனங்களும், கட்டுமானம் தொடங்கக்கூடிய நிலையில் 66 நிறுவனங்களும் உள்ளன. இப்பூங்காவில் உள்ள நிறுவனங்கள் சுமார் 1,185 கோடி ரூபாய் முதலீடு செய்து, 6,514 தொழிலாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பணியாற்றி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழில் பூங்காவில் 4,784 சதுர அடி பரப்பில், 1.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திட்ட மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்பூங்காவில் வாகன உதிரிபாகங்கள் மற்றும் துணை உதிரிபாகங்கள் தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. சுமார் 105 தொழிற்சாலைகளுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் 84 தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இப்பூங்காவில் உள்ள நிறுவனங்கள் சுமார் 2622 கோடி ரூபாய் முதலீடு செய்து, சுமார் 11,500 தொழிலாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பணியாற்றி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில், 3045 சதுர அடி பரப்பளவில், 1.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்புதிய தீயணைப்பு நிலையம் தொழிற்பூங்காவிற்குள்ளும் வெளியேயும் தீயணைப்பு

பணியினை மேற்கொள்ளும். இப்பூங்காவில் டையர், எண்ணெய் மற்றும் உணவு சார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் இரசாயன தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

மேலும், இந்நிகழ்ச்சியில், சிப்காட் நிறுவனத்தின் 2021–2022ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையான 61.20 கோடி ரூபாய்க்கான காசோலையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன் இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., பிரிட்டிஷ் துணை உயர் ஆணையரக துணைத் தலைவர் திரு. பால் டிரைடன், மூத்த ஆலோசகர் (பொருளாதாரம் மற்றும் காலநிலை மாற்றம்) திரு. சாம்குமார், அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஆர். வேல்ராஜ், பதிவாளர் டாக்டர் ஜி. ரவிகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

...............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in